★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✡ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 13உ திங்கள் (29—10—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 14உ செவ்வாய் (30—10—56) [இதழ் 120

'நான் ஒன்றும் மன்னன் அல்ல'— நேரு வருந்துகிறார்

சிலநேரங்களில் காங்கிரஸ் எனக்குப் பிடிக்காத காரியங்களையும் செய்து விடுகின்றது. நான் ஒன்றும் (முகலாய வம்சத்துக் கடைசிக் கால மன்னர்களுள் ஒருவரான) நாதிர்ஷா அல்ல—என்னுடைய கருத்துக்களை எப்போதும் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு! காங்கிரஸ் ஒரு ஜனநாயக இயக்கம்; அதில் கருத்துவேறுபாடுகள் இருக்கத்தான்செய்யும்" என்று மிக வருத்தத்தோடு பண்டித நேரு, அலகாபாத் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

வதந்திகளுக்கு இடம் தராதீர்

கழகத் தோழர்களுக்கு அண்ணு வேண்டுகோள்

வாள் எடுத்துக் களம் செல்லுகிறோம்

குழிதோண்டும் சூழ்ச்சிகள்—பாதையில் முள்பரப்பும் வேலைகள் நடைபெறலாம்

உறுதி குலையாதீர்! உளம் தளராதீர்!

"நாம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு செய்துவிட்டோம் நாம் எடுத்துள்ள இந்தத் தேர்தல் முடிவு, சட்டசபையில் போய் உட்காரவேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல; அப்படி நினைத்துக் கொண்டு நாம் நம்மையும் ஏமாற்றிக் கொள்ளக்கூடாது; பிறரையும் ஏமாற்றிவிடக்கூடாது. சட்டசபையில் இருந்து நாட்டுக்கு ஒரு நல்லாட்சி ஏற்பட முழு முயற்சி செய்யவேண்டும்.

"கையிலே வாள் எடுத்துக் களம் செல்பவனைப் போன்று நாம் இருக்கிறோம். கையிலே வாளையெடுக்கும் நேரத்தில் எதிரில் ஒருவன் தோன்றி, நம்மைவிடக் கூர்மையான வாளேந்தித் தாக்கக் கூடும்; வேல் கொண்டுத் தாக்கக்கூடும்; போகும் வழியில் நம்மை அறியாமல் குழி தோண்டும் சூழ்ச்சிகள் நடைபெறும். செல்லும் திக்கறிந்து, பாதை முழுவதிலும் இடையூறுகள் செய்யப்படலாம். இருந்தாலும் அத்தகைய இடையூறுகளையெல்லாம் நீக்கும் ஆற்றல் பெற்று உறுதி குன்றாமல், ஆர்வம் தளராமல் வாளேந்தின வீரன் முன்னேறிச் செல்வதுபோல், நமது உற்சாகம் குன்றாமலும், நம்முடைய உறுதி குலையாமலும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்."

—இவ்வாறு, 28—10—56ல், சென்னை - சிந்தாதிரிப்பேட்டை 30-வது வட்டக் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அண்ணு அவர்கள் கழகத் தோழர்களைக் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாம் தேர்தலில் ஈடுபடப் போகின்ற இந்த நேரத்தில் ஆங்காங்கே திண்ணைப் பேச்சுகள் ஏராளமாக நடைபெறலாம். நம்மைத் திட்டுபவர்கள் ஏராளமாக இருக்கலாம். இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் நான் கூறுவேன்—நம்மைத் திட்டக்கூடிய உரிமை பெற்ற ஒரே ஒருவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள்தான். அவர்கூட நம்மைத் திட்டாவிட்டால் வேறு யார்தான் நம்மைத் திட்டப்போகிறார்கள்? கம்யூனிஸ்டுகள் நம்மைத் திட்டுவார்களா? காங்கிரசார் நம்மைத் திட்டுவார்களா?

"காங்கிரசாரை எடுத்துக்கொள்ளுங்கள்; அவர்கள் என்ன சொல்வார்கள்? அவர்கள் 'பாணி'யே வேறு!—'அண்ணுதுரையா? அவர் மிகவும் நல்லவராயிற்றே! நன்றாகப் படித்தவர்; அவரிடம் வேண்டிய அளவு ஆற்றல் இருக்கிறது; என்றாலும் அப்படிப்பட்ட அவர் எங்களிடம் இல்லையே என்ற கவலைதான் எங்களுக்கு' என்றுதான் கூறுவார்கள்.

"கம்யூனிஸ்டுகள் என்ன சொல்வார்கள்?—'பரவாயில்லையே; இந்த ஒட்டை சமாச்சாரமான திராவிட நாடு பிரிவினைப் பிரச்சினையை வைத்துக்கொண்டு, நம்முடைய பொதுவுடைமைப் பிரச்சினையை இரண்டாந்தரமான பிரச்சினையாக்கிவிட்டார்களே' என்றுதான் சொல்வார்கள்.

"பெரிய விருந்துகளில் எல்லாம், இனிப்புப் பண்டங்கள் இருந்தாலும் அங்கு கொஞ்சம் பாகற்காய் பச்சடியும் இருக்கும்; ஏனென்றால், இனிப்பைத் தின்றுவிட்டு கொஞ்சம் பாகற்காய் பச்சடியை வாயில் போட்டுக்கொண்டு மறுபடியும் இனிப்பைத் தின்றால், அதிகமாக இனிப்புத் தெரியும். அதுபோலத்தான் நமக்குப் பெரியார் அவர்கள் பாகற்காய் பச்சடி! அவர், திட்டத் திட்ட, நமக்குக் கசப்பு ஏற்பட, நாம் மீண்டும் இனிப்புப் பெறுகிறோம்.

"சோமசுந்தரம் ஒரு தொகுதியில் நிற்கிறார் என்றால், அவருடைய நண்பர் சுந்தரேசன் அவரைப் பார்த்து, 'என்ன—எத்தனை ஓட்டுகள் வாங்குவாய்?' என்றுதான் கேட்பார்; 'எத்தனை ஓட்டுக்கள் கிடைக்கும்?' என்று கேட்க மாட்டார்.

"இந்த நாட்டில் தேர்தல் என்றால், 'பணம் கிடைக்குமா? செலவழிப்பார்களா?' என்றுதான் பலரும் நினைக்கின்றனர்! திண்ணையில் உட்கார்ந்து பேசுபவர்கள்—தேர்தலில் போட்டியிடுபவரைச் சார்ந்தவர்கள், நம்மைப்பற்றிப் பேசும்போதெல்லாம், 'என்ன—இவர்கள் தேர்தலில் நிற்கப்போகிறார்களாமே—இவர்களிடம் பண பலம் இருக்கிறதா? ஓட்டுப்போடுபவர்களுக்கு 8 அணு, 4 அணு கொடுப்பார்களா?' என்றுதான் கேட்டுக்கொள்வார்கள்.

"அப்படி எல்லாம் அவர்கள் பேசிக்கொள்ளும்போது நமது கழகத் தோழர்கள் இரண்டு முறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்; ஒன்று, அவர்கள் பேசுவதற்கு நீங்கள் யாரும் பதிலே சொல்லவேண்டாம்; மற்றொன்று, எங்களிடம் வந்து, 'இப்படி இப்படி எல்லாம் பேசிக்கொள்கிறார்கள்' என்று சொல்லவும் கூடாது.

"தேர்தல் காலத்தில், வதந்தி என்பது வட்டமிட்டுச் செல்லும் வல்லூறு போன்றது. அந்த வதந்திகளையெல்லாம் கேட்டுவிட்டு நீங்கள், அவற்றைத் துச்சமென மதித்து, காரித் துப்பிவிட்டுப் போய் விடுங்கள். அந்த வதந்திகளையெல்லாம் நீங்கள் கேட்டு, அவ்வதந்திகளை மேலும் பரப்பினால், வதந்திகளைச் சொல்வோரைவிட உங்களுக்குத்தான் எங்கள் மீது அதிகச் சந்தேகம் என்று பொருள்.

"நமது கழகத்தைப் பற்றியோ, கழகத்திலுள்ள தனிப்பட்ட ஒருவரைப் பற்றியோ, அல்லது எல்லாரையும் சேர்த்து மொத்தமாகவோ யாராவது சந்தேக வாதங்களைக் கிளப்பினால்—எங்கள்பால் இருக்கும் உங்கள் நம்பிக்கை அசைக்க முடியாததாக இருக்குமானால்—உங்களுக்கிருக்கும் உள்ளம் உறுதி கொண்டதாக இருக்குமானால்—அவற்றையெல்லாம் நீங்கள் ஒரு காதால் வாங்கி, மற்றொரு காதால் விட்டுவிடுங்கள். என்னிடமேகூட எத்தனையோ பேர் எத்தனை எத்தனையோ வதந்திகளைக் கூறத்தான் செய்கின்றனர். ஆனாலும் உங்களிடம் நான் வைத்துள்ள பெருமதிப்பின் காரணமாக அவைகளை எல்லாம் பொருட்படுத்துவதே இல்லை"

இந்து மதம் கரைகிறது!

அகோலா, அக். 28—

இங்கு நகர தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் கூட்டத்தில் பெண்கள் உட்பட 2000 பேர் புத்த மதத்தில் சேர்ந்தனர்.

★★★★★★★-★★★★★★★★-★★

சென்னை தோழர்கட்கு நன்றி அறிவிப்பு

28-10-56 அன்று தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம், சென்னை மாவட்டத்தில் தேர்தல் சூழ்நிலைக்கான விவரங்களைத் தந்து, ஆய்வுக் குழுக்கூட்டம் இனிது நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு தந்த கிளைக் கழகச் செயலாளர்கள், கழகப் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்கு எங்களின் மனமுவந்த நன்றியறிதலையும் வணக்கத்தையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

இரா. நெடுஞ்செழியன்
ஈ. வெ. கி. சம்பத்
என். வி. நடராசன்
கே. ஏ. மதியழகன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அராபிய உலகு கனல் கக்குகிறது

அல்ஜீரியத் தலைவர்களை விடுதலை செய்யக் கோரி பொது வேலைநிறுத்தம்

பாரிஸ், அக். 28—

முறையற்ற— காட்டுமிராண்டித்தனமான—நயவஞ்சகமான முறையில், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள், அல்ஜீரிய விடுதலை இயக்கத் தலைவர்கள் ஐவரைக் கைது செய்தனர் அல்லவா?

அந்தத் தலைவர்கள் இப்போது பாரிஸ் நகருக்குக் கொண்டுவரப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கின்றனராம்.

அவர்கள் ஐவரும், இராணுவ நீதிமன்றம் ஒன்றில் விசாரிக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அல்ஜீரியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் முகத்தான் அராபியம் எங்கும் பொதுவேலை நிறுத்தம் செய்யுமாறு அரபு லீக் விடுத்திருந்த வேண்டுகோள், நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுள்ளது என்று தெரிய வருகிறது.

எகிப்து, ஈராக், ஜோர்டான் முதலிய நாடுகள், மற்றும் மொராக்கோ, டுனீஷியா நாடுகளிலும் பொது வேலைநிறுத்தம் மிக வெற்றிகரமாக நடைபெற்றிருப்பதுடன் மக்கள் கிளர்ந்தெழுந்து, தலைவர்களை விடுதலை செய்யக் கோரி பலத்த ஆர்ப்பாட்டமும் நடத்தியிருக்கின்றனர்.

சென்னையில் தேர்தல் ஆய்வுக் குழு விசாரணை

ஆயிரத்திற்கு மேற்பட்ட கழகப் பிரதிநிதிகள் ஆர்வமுடன் சாட்சியமளித்தனர்

சென்னை மாவட்டத்தில் தேர்தல் சூழ்நிலைக்கான விவரம் அறிய, ஆய்வுக் குழுவினரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகிய ஐவரும் 28—10—56 காலை 9 மணிக்கு தலைமை நிலையத்தில் ஆய்வுக் குழுவின் பணியைத் துவங்கினர்.

'அறிவக'த்திற்கு வெளியே ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

காங்கிரஸ் உள்ளிட்ட மாற்றுக் கட்சியினரும் தேர்தல் ஆய்வுக் குழுவிடம் கழகப் பிரதிநிதிகள் விவரம் அறிவிக்கச் செல்லும் காட்சியைக் காண ஏராளமாக வந்திருந்தனர்.

வண்ணை, பேசின்பிரிட்ஜ், ஆர்பர், பெரம்பூர், ஆயிரம் விளக்கு, எழும்பூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராயநகர் ஆகிய எல்லாத் தொகுதிகளிலிருந்தும் வந்திருந்த கிளைக் கழகங்களின் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக ஆதரவாளர்கள் ஆய்வுக் குழுவினரிடம் தேர்தல் சூழ்நிலைக்கான விவரங்களை அறிவித்தனர்.

ஆய்வுக் குழுவின் விசாரணை மாலை 5-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

காலையிலிருந்து மழை பெய்து கொண்டிருந்தும்கூட ஏராளமான கழகத் தோழர்கள் ஆர்வத்துடன் விவரம் அறிவித்தனரது, தங்கள் கடமையை இனிது நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்ச்சியையும் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடப் போவதின் வாயிலாகத் தாங்கள் ஆற்றயிருக்கும் கட்டுப்பாடான பணியினையும் எடுத்துக் காட்டுவது போன்றிருந்தது.

வடஎல்லைக் கிளர்ச்சி: 179 பேர் விடுதலை

சென்னை, அக். 28—

வடஎல்லைக் கிளர்ச்சியில் கைது செய்யப்பட்ட 179 பேர் நேற்று சென்னை மத்திய சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

வங்கக் கடலில் புயல் உருவாகியுள்ளதாம்!

சென்னை, அக். 29—

வங்கக் கடலில் புயல் உருவாகியுள்ளதாம்; இதன் விளைவாக சென்னை மாநிலத்தில் அடுத்த 36 மணி நேரத்தில் பலத்த காற்று வீசுமாம்; கனமழையும் பெய்யக் கூடுமாம்!

மத்திய சமூக நல போர்டின் கீழ், நாடு முழுவதிலும் தற்போது மொத்தம் 321 நல விஸ்தரிப்புத் திட்டங்கள் வேலை செய்து வருகின்றன.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—10—'56 திங்கள்

அநாகரீகச் செயல்!

★

கடந்த இரண்டாண்டுக் காலமாக சுதந்திரம் கோரிவரும் அல்ஜீரிய நாட்டு மக்களை சுட்டுக் கொல்லுவதின் மூலம், தனது முழு வீழ்ச்சிக்குத் தீவிரமாக வழி செய்துகொண்டிருக்கின்ற பிரான்ஸ், இந்தக் காலத்திலும் எந்த வல்லரசும் மேற்கொள்ள அஞ்சும் ஒரு அநாகரீகமான செயலைச் செய்திருக்கிறது. அல்ஜீரியாவில் தனக்குள்ள அரசியல் ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொள்ள, எத்தகையக் காட்டுமிராண்டிச் செயல்களையும் மேற்கொள்ள பிரான்ஸ் தயங்காது என்பதற்கு, பிரான்சின் அநாகரீகச் செயல் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது.

அல்ஜீரிய விடுதலை முனையைச் சேர்ந்த ஐந்து தலைவர்கள், மொராக்கோவிலிருந்து ஒரு பிரெஞ்சு விமானம் மூலம் டுனீசியாவிற்குச் சென்றனர். அவர்கள் அவ்வாறு விமானம் மூலம் செல்ல இருக்கும் செய்தி, ஒளிவு மறைவாக வைத்திருக்கப்படாமல், ஒரு கிழமைக்கு முன்னரே உலகுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. விமான மூலம்செல்லும் அல்ஜீரியத் தலைவர்களை, அறவழி அனைத்தையும் அலட்சியப்படுத்தி, விண்ணில் வழி மறித்து அச்சுறுத்தி கைது செய்வதற்கு, பிரான்ஸ் போன்ற ஓர் அரசு இந்தக் காலத்திலும் துணிந்திருக்கிறது என்ற உண்மையை, அந்தத் தலைவர்கள் முன்கூட்டியே அறிந்திருப்பார்களேயானால், உண்மையிலேயே தங்கள் பிரயாணத்தை வெளிப்படையாக முன்னரே அறிவித்திருக்க அவர்கள் முன்வந்திருக்க மாட்டார்கள்.

விண்ணில் பறந்துவந்த அல்ஜீரியத் தலைவர்கள் ஐவரை, அவர்கள் ஏறிவந்த பிரெஞ்சு விமானத்தை, போர் விமானங்களை ஏவிவிட்டு வழி மறித்து, தனது டுனிஸ் இராணுவ விமான தளத்தில் இறக்கி இருக்கிறது பிரான்ஸ்.

விமானத்திலிருந்து அந்த ஐந்து தலைவர்களையும் வெளிவரச் செய்து, அவர்கள் கரங்களில் விலங்கிட்டுக் கைது செய்து காவலில் வைத்துவிட்டது பிரான்சு.

இவ்வாறு செய்து விடுவதின் மூலம் அல்ஜீரியாவின் சுதந்திர எழுச்சி ஓய்ந்து போகும் என பிரான்சு எண்ணி, இத்தகு காட்டுமிராண்டிச் செயலை மேற்கொண்டு இருக்குமானால், அதைவிட மதிகெட்டச் செயல் வேறு ஒன்றும் இருக்கமுடியாது. அச்சம்பவத்திற்குப் பின்னர், அல்ஜீரியாவில் நடந்துள்ள சம்பவங்கள், பிரான்சின் தவறுன எண்ணத்தை விளக்கிக் காட்டுவனவாக உள்ளன.

அல்ஜீரியத் தலைவர்கள் ஐவரை முறையற்ற முறையில் கைது செய்ததின் விளைவாக, அல்ஜீரியாவிற்கும் பிரான்சுக்கும் இடையில் உடன்பாடு ஏற்படுவது உடைந்துபோனதுடன் மட்டுமல்லாது, அல்ஜீரியாவில் அமைதி நிலவுவதற்கு இன்றியமையாத் தேவையாக உள்ள, அதன் இரண்டு பக்கத்திலும் இருந்துவரும் டுனீசியா, மொராக்கோ ஆகிய இரண்டு நாடுகளின் நல்லெண்ணத்தையும், நல்லாதரவையும் இழக்க வேண்டிய கட்டாயமும் பிரான்சுக்கு ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

சென்ற இரண்டாண்டுக் காலமாக அல்ஜீரியாவில் தான் எடுத்துக்கொண்டு வந்திருக்கின்ற இராணுவ நடவடிக்கையின் விளைவாக பிரான்சுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளுடன்மேலும் பலமடங்கு அல்லல்களை ஏற்கவேண்டிய நிலைக்கு, அல்ஜீரியத் தலைவர்கள் ஐவர்களைக் கைது செய்ததின் மூலம், தானே தன்னை வலிய ஆளாக்கிக்கொண்டிருக்கிறது பிரான்ஸ்.

இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக, பாரிசில் இருந்து வந்த டுனீசியாவின் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டுவிட்டார். அதுவுமன்றி, அல்ஜீரியாவிற்கும் பிரான்சிற்கும் உடன்பாடுகாண முன்வந்த மொராக்கோ - டுனீசியா—அல்ஜீரியா பிரதிநிதிகளைக் கொண்ட குழு, 'இனி பிரான்சுக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடங்கக்கூடிய 'போர்க் குழு'வாக மாற்றி அமைக்கப்படும் என டுனீசியாவின் சார்பில் அறிவிக்கக்கூடிய ஒரு அவல நிலையும் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

டுனீசியாவின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள மேற்படி அச்சுறுத்தல் வெறும் மிரட்டலேயாகும் என பிரான்சு கருதிக் கொள்வதாக இருந்தாலும், பிரான்சின்மீது மொராக்கோவிலும் டுனீசியாவிலும் உருவாகக்கூடிய அதிருப்தி, அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்தில் பிரதிபலிப்பதும், அதைச் சமாளிக்க முடியாமல் பிரான்சு திணறுவதும் எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

பிரான்சுமீதும், பிரிட்டன் மீதும், சூயஸ் சிக்கலின் காரணமாக அராபிய மக்களிடம் வளர்ந்துள்ள பகை உச்ச நிலையில் இருக்கும் இந்தத் தருணத்தில், பிரான்ஸ் இத்தகையக் காட்டுமிராண்டிச் செயலில் ஈடுபடுவதின் மூலம், அப்பகையைக் கொழுந்துவிட்டெரியச் செய்திருப்பது, அதன் ஏகாதிபத்திய வெறிக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

தனது ஏகாதிபத்திய வெறி இந்தோ-சீனாவில்முழுத்தோல்வி கண்ட பிறகும்கூட, பிரான்சு அதைவிட்டு விலக மனந்துணியாதது விசித்திரமாகத்தான் இருக்கிறது.

பல்வேறு மாநிலங்களில் உள்ள கஸ்தூரிபாய் காந்தி ஞாபகார்த்த நிறுவனங்களைச் சேர்ந்த 20 நிலையங்களில்ஓராண்டுபயிற்சி வகுப்பில் தற்போது மொத்தம் 909 பேர்கள் 'கிராமசேவிகைகளா'கப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

போலந்து, அங்கேரி மாறுதல்கள்

இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்குப் படிப்பினையல்லவாம்!

அவர்களை யாரும் ஆட்டிப்படைப்பதில்லையாம்

மாஸ்கோ மணம் அவர்களுக்குக் கிடையாதாம்

அஜாய் கோஷின் அற்புத விளக்கம்

புதுடில்லி, அக். 24—

மத்திய ஐரோப்பாவிலுள்ள பொதுவுடைமை நாடுகள் மீது இரஷ்யா ஆதிக்கம் செலுத்துவதை அந்த நாடுகள் விரும்பாமல், தனித்துச் சுதந்திரமாக வாழ விரும்பும் நிலையை, போலந்து, அங்கேரி ஆகிய நாடுகள் முன்னணியில் நின்று வெற்றி கண்டுவிட்டதல்லவா?

மாஸ்கோ விருப்பப்படியே தலைவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கட்டளை உதாசினப்படுத்தப்பட்டுள்ளதல்லவா?

இதைக் குறித்து, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் அஜாய் கோஷ் அவர்களைக் கேட்டபோது, அவர், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் சம அந்தஸ்துடன் விளங்குவதாகவும், மாஸ்கோவில் நடைபெற்ற பொதுவுடைமை மாநாட்டில்கூட தன்னுடைய தனித் தன்மையை விட்டுக் கொடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

போலந்திலும் அங்கேரியிலும்ஏற்பட்டுள்ள தேசியப் போட்டத்திலிருந்தும், சுதந்திர வேட்கையிலிருந்தும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் கற்றுக்கொள்ள வேண்டியது ஒன்றும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

★

ரஷ்ய ஆதிக்க பலம் குறைகிறது

குருஷ்சேவ் பணிந்துவருகிறார்

படைகள் வாபஸ் பெறப்படும்; கப்பல்களும் திரும்பிவிடும்

வார்சா, அக். 27—

ரஷ்யத் தலைவர்களின் விருப்பத்திற்கு மாறாக, கோமுல்கா என்பவர் போலந்து பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு மத்திய ஐரோப்பிய நாடுகளில் பெரிய பரபரப்பு ஏற்பட்டதும், ரஷ்யப் போர்ப் படைகளும், போர்க் கப்பல்களும் வலம் வந்ததும் எல்லோரும் அறிந்த ஒன்றாகும்; ஆனால், இந்த ரஷ்ய மிரட்டலுக்குப் போலந்து சற்றும் அஞ்சவில்லை.

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள போலந்து தலைவர் கோமுல்காவின் கொள்கைகளை ரஷ்யா ஏற்றுக்கொண்டுள்ளது.

போலந்துக்கு ரஷ்யப் படைகள் வருவதை நிறுத்திவிடுவதாக குருஷ்சேவ் அறிவித்துள்ளார்.

போலந்து கடலிலிருந்து கப்பல்களையும் ரஷ்யா திருப்பி அழைத்துக்கொள்ளுமென்று தெரிகிறது.

போலந்து பத்திரிகைகள் சோஷலிசத்திற்கு விரோதமாக எழுதுவதாக ரஷ்யப் பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரபூர்வமான ஏடு 'பிரவ்டா' கண்டித்து எழுதியுள்ளதையும் 'வாபஸ்' பெறக்கூடுமாம்.

மீண்டும் ரஷ்யாவுடன் பேச்சு நடத்துவதற்கு போலந்திலிருந்து ஒரு குழு ரஷ்யாவுக்கு வரவேண்டும் என்றும், அந்தக் குழுவிற்கு கோமுல்காவே தலைவராக இருக்க வேண்டும் என்றும் குருஷ்சேவ் விருப்பம் தெரிவித்துள்ளார்.

தொல்லைகளை ஏற்றவர்களின் துயர் தீர்க்கப்படும்?

பொதுவுடைமைக் கட்சியின் தலைமைப் பதவியை கோமுல்கா அடைந்த பின்பு வார்சாவில் முதல் பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

ஸ்டாலின் ஆட்சியின்போது தொல்லைகள் பல ஏற்று, ஒரு குற்றமும் செய்யாதவர்களுக்கு நட்ட ஈடு அளிப்பதற்காக ஒரு மசோதா குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

1,600 ஏகர் நிலத்தில் ஆட்டுப்பண்ணையாம்!

சேலம், தென்னுற்காட்டில் ஆரம்பிக்கப்படுமாம்

சேலம், தென்னுற்காடு மாவட்ட எல்லையில் 1,600 ஏகர் நிலத்தில் சென்னை சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட சர்க்கார் ஆட்டுப் பண்ணை விரைவில் ஆரம்பிக்கப்படும். இதற்காக ரூ 1,35,000 இவ்வாண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் இதுவே பெரிய ஆட்டுப் பண்ணையாகும்; உதகமண்டலத்தில் இருப்பது சிறியதாகும்.

சேலம் மாவட்டத்தில் இதற்கான நிலம் ஏற்கனவே வாங்கப்பட்டுள்ளது; தென்ஆற்காடு மாவட்டத்தில் நிலம் வாங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஐ. நா. கல்வி-விஞ்ஞான-கலாச்சார மாநாடு

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி துணைத் தலைவராகிறார்

புதுடில்லி, அக். 27—

ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார மாநாடு நவம்பர் 5-ம் தேதி புதுடில்லியில் நடை பெறும். மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சர் இந்தியத் தூதுக்கோஷ்டியின் தலைவராகவும், சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் துணை தலைவராகவும் கலந்துகொள்வர்.

செய்தித் தாள் தயாரிப்புதொழிற்சாலை

ஐதராபாத் அருகில் நிறுவ டில்லியின் திட்டம்

புதுடில்லி, அக். 27—

டில்லி ஆட்சியினர், ஐதராபாத்திற்கு 125 மைல் தூரத்தில் உள்ள போதன் என்னும் இடத்தில் பத்திரிகை அச்சடிப்பதற்குப் பயன்படும் காகிதத்தைத் தயாரிக்கும் ஓர் தொழிற்சாலையை நிசாம் கரும்பு ஆலைக்குச் சமீபத்தில் அமைக்கக்கூடும் என்று தெரியவருகிறது.

இந்தக் கரும்பு ஆலையில் கிடைக்கும் கரும்புச் சக்கை, செய்தித்தாள் தயாரிப்புக்குப் பயன்படும் என்று தெரிகிறது.

திரு-கொ. தமிழ்ப் பகுதி பஸ் போக்குவரத்து

சென்னை ஏற்று நடத்தும்

சென்னை, அக். 26—

மாநிலப் புதிய அமைப்புக்குப் பிறகு, சென்னையுடன் சேரவிருக்கும் திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளிலுள்ள பஸ் போக்குவரத்தை ஏற்று நடத்துவதற்கு சென்னை அரசாங்கம் ஏற்பாடு செய்துவருகிறது. இங்கு மொத்தம் 21 பஸ் 'ரூட்'டுகள் உள்ளன; சுமார் 70 பஸ்கள் இருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது பணியாற்றும் ஊழியர்கள் அப்படியே இருப்பார்கள்.

வடவர் நிறுவனம் வளர்வதைக் காணீர்!

சுமார் ரூ. 7 கோடி மதிப்புள்ள எஞ்சின்களை அமெரிக்காவிலிருந்து தருவிக்குமாம்

புதுடில்லி, அக். 26—

பிரபல வடநாட்டுத் தொழிலதிபர்களான டாடா நிறுவனத்தார், அமெரிக்காவிலிருந்து ஏழு இரயில் எஞ்சின்களைத் தருவிப்பதற்கு முனைந்துள்ளனர்; அதற்கான 'ஆர்டர்' கொடுக்கப்பட்டு விட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

150 இலட்சம் டாலர் (ஒரு டாலர் சுமார் ரூ. 4—12—0 ஆகும்) மதிப்புள்ள இந்த எஞ்சின்கள் எல்லாம் டீசல் எண்ணெயில் இயங்கும் மின்சார இரயில்களாக இருக்குமாம்.

மருத்துவ விடுதியும் வடநாட்டில்தானு?

மத்திய இரயில்வே ஏற்படுத்தும்

நோயினுல் துயருறும் தொழிலாளர்களுக்கு இலவச சிகிச்சை அளிப்பதற்காக 40 படுக்கைகள் கொண்ட காச நோய் மருத்துவ விடுதி ஒன்றை, 1957-ம் ஆண்டு இறுதிக்குள், போபாலில், மத்திய இரயில்வே ஏற்படுத்துமாம்!

இரயில்வேயினுல் கட்டப்படும் இந்த முதல் மருத்துவ விடுதிக்கு ரூ. 1,12 000 செலவாகுமாம்.

ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 90 கோடி!

சென்னை மாநில ஆதிக்குடி மக்கள் முன்னேற்றத்திற்குக் கிடைப்பது ரூ. 6 கோடிதான்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆதிக்குடிகளின் அபிவிருத்திக்கு செலவு செய்ய ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 90 கோடியில், சென்னை மாநிலத்திலுள்ள ஐம்பதினுயிரம் ஆதிக்குடி மக்களுக்கு ரூ. 6 கோடி மட்டுமே செலவிடப்படுமாம்!

இதில், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆதிக்குடி மக்களுக்கு ரூ. 25 லட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம். வருடத்திற்கு ரூ 5 இலட்சம் வீதம் நீலகிரி மாவட்டத்தில் செலவிடப்படுமெனக் கூறப்பட்டுள்ளது.

1,308 திட்டங்களில் சென்னைக்கு 52!

புதுடில்லி, அக். 27—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், மத்திய சமூகநல போர்டு 1,308 திட்டங்களைத் தயாரித்துள்ளது.

இதில் சென்னைக்கு 52 திட்டங்கள் மட்டுந்தான் தயாரிக்கப்பட்டுள்ளன.

மற்ற மாநிலங்களில்—ஆந்திரம் 80; அசாம் 68; பீகார் 72; பம்பாய் 176; கேரளம் 20; மத்தியப் பிரதேசம் 160; மைசூர் 88; ஒரிசா 52; பஞ்சாப் 84; இராசஸ்தான் 104; உத்திரப் பிரதேசம் 204; இமாசலப் பிரதேசம் 20; டில்லி, மணிப்பூர், திரிபுரா, கிேோபார், புதுவை, அந்தமான், லாக்கோடிவ், மினிகாய் ஆகிய தீவுகளுக்குத் தலா 4 வீதம்—என்ற அளவில் தயாரிக்கப்பட்டுள்ளன

தொழில் முன்னேற்றத்தில் பம்பாய் காட்டும் தீவிரம்

பம்பாய், அக். 25—

பம்பாய் அரசாங்கம், மாநில நிதி நிறுவனத்திலிருந்து தொழில் முன்னேற்றத்திற்காகக் கடந்த மார்ச் 31-ந் தேதி வரையில் ரூ. 57 இலட்சம் கடனுக அளித்துள்ளதாகவும், இந்த அளவிற்கு வேறு எந்த மாநிலமும் இந்தியாவில் தொழில் முன்னேற்றத்திற்கு உதவியளிக்கவில்லை என்றும், சட்டசபையில், அம்மாநில முதலமைச்சர் கூறியுள்ளார்.

'சங்கரலிங்கனாரின் சாவுக்கு சர்க்காரே பொறுப்பு'

'இட்லரிலும் கல் நெஞ்சம் படைத்தவர் காமராசர்'

அனுதாபக் கூட்டத்தில் நாராயணசாமி கண்டனம்

23—10—56 மாலை, சென்னை பத்திரையன் தெருவில் சென்னை 14-வதுவட்ட தி மு. கழகச் சார்பில், சங்கரலிங்கனார் மறைவை யொட்டி நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில், தோழர் டி. வி. நாராயணசாமி ஆற்றிய சொற்பொழிவின் சாரம் இங்கு தரப்படுகிறது:—

"சங்கரலிங்கனார் வாழ்க்கையில் தூய்மையானவர்; எளிமையானவர்; அப்பழுக்கற்ற காந்தியவாதி; மாபெரும் தியாகி தன் உயிர் போனாலாவது இந்த நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வருமா என்பதற்காக 77 நாட்கள் உண்ணாவிரதமிருந்தார்; ஆனால் உணர்ச்சியற்றுப்போன இந்த ஆட்சியாளரால் நாதியற்ற நிலைக்கு அவர் ஆளாக்கப்பட்டார்; அலட்சியப் படுத்தப்பட்டார்.

"ஒரு இலட்சியத்திற்காக உண்ணாவிரதமிருந்தார். அப்படிப்பட்ட இலட்சியவாதியை சொந்த ஊர்க்காரரான—சொந்தக் கட்சியினரான காமராசர் ஒருநாள்கூட நேரில் சென்று பார்க்கவில்லை. அண்ணா அவர்களும், ம. பொ. சி. அவர்களும், மற்றும் பல கட்சித் தோழர்களெல்லாம் அவரைச் சந்தித்தார்கள்; என்றாலும், காங்கிரசையே வளர்த்த அந்தக் காந்தியவாதி 76 நாட்களாக உண்ணாவிரதம் இருந்தும் அவரை ஒரு நாள் கூடப் போய் பார்க்காத இந்தக் காமராசரின் இதயத்தை எதற்கு ஒப்பிடுவது? இதைவிடக் கல்நெஞ்சம் வேறேது?

"கொடிய இதயம் படைத்தவன் என்று உலகத்தவரால் கூறப்பட்ட இட்லர்கூட, தன் இனத்தின் மேல்—தன் மொழியின் மேல் பாசம்கொண்டிருந்தானே; அப்படிப்பட்ட பாசம்கூட இல்லாமல் இருந்துவிட்ட காமராசரின் மரத்துப்போன உள்ளத்தைக் கண்டு நாமெல்லாம் வருந்துகிறோம்.

"அவரைப் போன்ற தியாகி ஆந்திராவிலோ, குசராத்திலோ, வங்காளத்திலோ உயிர்விட்டிருந்தால் அங்கு இப்போது நிலைமை வேறாக இருக்கும்; பெரும் அராஜகங்கள் நடைபெற்றிருக்கும்; கோடிக்கணக்கான பணம் பாழாக்கப்பட்டிருக்கும். ஏனென்றால், அங்கெல்லாம் 'தன்மான உணர்ச்சி' அதிகம்; ஆனால் துர்ப்பாக்கியம் நிறைந்த இந்தத் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்காகப் பாடுபட்டால் ஆதரிப்பார் யாருமில்லையே?

"தமிழ் உணர்ச்சி, தமிழர் நலம் பேணும் நல்லாட்சிதான் இங்கு இருக்க வேண்டுமே தவிர, மற்ற எவரும் இங்கிருந்தால் நிச்சயம் தமிழ் நாட்டில் வருங்காலம் இருள்சூழ்ந்தே போகும்.

"தன்னுடைய வாழ்நாள் முழுவதும் காந்திய நெறியைப் பின்பற்றிய அப்பழுக்கற்ற ஒரு தியாகி, உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார் என்றால், நம்மிடையே தமிழ் உணர்ச்சி இல்லை என்பதுதானே அர்த்தம்? அந்த உணர்ச்சி நமக்கு இருந்திருக்குமானால் இந்நேரம் காமராசர் இங்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்க முடியுமா? கல்நெஞ்சம் படைத்த காமராசரை மட்டுமல்ல — காங்கிரசையே நாம் விரட்டியடித்தாக வேண்டும்.

"'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்பதற்காக உண்ணாவிரதமிருந்து இறந்த சங்கரலிங்கனாரை எட்டிக்கூடப் பார்க்கமுடியாத உணர்ச்சியற்ற இந்தக் காமராசர் நல்லவராம்!

"'தமிழ்சோற்றை உண்டுவளர்ந்த காமராசர், அவர் உடம்பில் தமிழ் இரத்தம்தான் ஓடுகிறதா?'—என்று நாம் சந்தேகிக்கும் வகையில், 'தமிழ் நாடு' என்றால் உலகிற்குத் தெரியாது என்று கூறுகிறார்!

"'எங்கள் மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்ற பெயர் வேண்டும்; இல்லையென்றால், இதோ, என் இராஜினாமா!' என்று காமராசர் கூறியிருந்தால், அவர் பெயர் இன்று பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்குமே! அதைச் செய்யத் துணிவில்லாத காமராசர், தன்னைத் தமிழன் என்று வெட்கமில்லாமல் எப்படித்தான் கூறிக் கொள்ளுகிறாரோ?

"இந்த சர்க்கார் மானம் உள்ள சர்க்காராக இருந்தால் பதவியை விட்டிருக்கலாம்; ஆனால், அந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆனால் அதை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக சங்கரலிங்கனார் 77 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிரையும் விட்டுவிட்டார்.

"சங்கரலிங்கனாரை அநியாயமாகச் சாகடிக்கவிட்ட இந்த சர்க்காரை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்."

கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம்

திருவரங்கம்:

2—10—56ல் தோழர் எஸ். எம் வி. சாமி தலைமையில் கிளைக் கழகத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

ஆலங்கோட்டை:

30—9—56 மாலை 7 மணிக்கு கழகச் சார்பில் திரு. வி.க. படிப்பக மனையில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

புதூர் (இராமநாதபுரம்)

9—10—56-ல் கிளைக்கழக இல்லத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது

லெப்பைக்குடி:

28—9—56 மாலை 5 மணிக்கு செகரியா சைகிள் ஷாப்பில் தோழர் கு. அ. அப்துல் அமீது தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

உதகமண்டலம்:

7—10—56 மாலை 7 மணிக்கு உதகை, கடந்தல் கலை வளர்ச்சி மன்றத்தில் தோழர் வி. பெரியசாமி தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

முதலூர்:

9—10—56ல், முதலூர் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் தோழர் சேர்மதுரை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பெங்களூர் - சிவாஜிநகர்:

பெங்களூர் சிவாஜி நகரிலுள்ள தமிழ் மன்றத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பெங்களூர்-பிளாக்பள்ளி:

30—9—56பிற்பகல் 2 மணிக்கு தோழர் ஜான் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் பட்டது. தோழர்கள் பலர் பேசினர்.

அய்யம்பேட்டை:

8—10—56 மாலை 4 மணிக்கு தோழர் ஆர். அர்த்தநாரி தலைமையில் மௌன ஊர்வலமும், மாலை 6 மணிக்குக் கழகத்திற்கெதிரில் தோழர் பி. டி. வெங்கடசுப்பு தலைமையில் அனுதாபக் கூட்டமும் நடைபெற்றது.

வடக்கன்குளம்:

7—10—56 மாலை 5 மணிக்குத் தோழர் செல்லையா தலைமையில் கிளைக் கழகத்தில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

சூளேசுவரன்பட்டி:

3—10—56 இரவு 9 மணிக்கு கழக இல்லத்தில் தோழர் ப. கா. இராமசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் பட்டது.

திருச்சி:

13—10—56-ல் திருச்சி சின்னையா பிள்ளை சத்திரத்தில் நடைபெற்ற இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் ஊழியர்கள் மாநாட்டில் தோழர் சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதுடன், ஒரு நிமிடம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு இறுதி மரியாதையும் செலுத்தப் பட்டது.

கள்ளக்குறிச்சி:

23—9—56ல் திரு டாக்டர் ஏ. சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருக்குறள் மாணவர் மாநாட்டில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 1 நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது.

வாணியம்பாடி:

30—9—56ல் நகர தி. மு. கழக இல்லத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

* * *

தோழர் சாமியின் மறைவுக்கு, திருப்பத்தூர் (வ. ஆ. மாவட்டம்) தாலுகா விவசாயிகள் சார்பில், சங்கச் செயலாளர் வி. என். தத்தப்பன் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறார்.

ஆறுதல் கூறுகிறார்— அச்சமும் கொள்கிறார்!

அலகாபாத், அக். 26—

ஐரோப்பாவிலும், பாகிஸ்தானிலும், மற்ற ஆசிய நாடுகளிலும், அன்றாட வாழ்க்கைப் பண்டங்களின் விலைகள் இந்தியாவில் உள்ளதைவிட மிகவும் அதிகம் என்றும், அந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் இந்தியா வெற்றி கண்டுள்ளது என்றும் பண்டித நேரு காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் கூறி திருப்தியடைந்திருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 4,800-கோடியாக உயர்த்தப்பட்டிருப்பதால், விலையுயர்வை அவசியம் தடுத்தாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

விலைகள் தொடர்ந்து ஏறிக்கொண்டே போனால் சாமான்களின் விலைகள் அதிகரிக்கும் என்றும், கூலியும் அதிகம் தரவேண்டியிருக்கும் என்று அஞ்சுவதாகவும் கூறினார்.

டால்மியா ஜிப்சம் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வர்

கூலி கொடுக்கப்படாததே காரணமாம்

சென்னை, அக். 25—

டால்மியா சிமெண்ட் (பாரத்) நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் ஜிப்சம் சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் டால்மியாபுரத்தில் ஆர்ப்பாட்டம், மறியல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட இருப்பதாக அத்தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார்.

சுரங்கத்தில் வேலை செய்யும் திரணிபாளையம், உக்கலூர், அன்னைப்பாடி, மற்றும் சில கிராமங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குக் கடந்த சில மாதங்களாகக் கூலி கொடுக்கப்படவில்லை.

அந்த நிறுவனத்தைச் சேர்ந்த கூலி கொடுக்கும் அதிகாரியைச் சந்தித்து தொழிலாளர்கள் தங்கள் குறைகளையும் கோரிக்கைகளையும் எடுத்துரைத்தும் எவ்விதப் பலனும் ஏற்படவில்லை.

பல முறைகள் கூட்டாகவும் தமிழ் நாடு ஜிப்சம் சுரங்கத் தொழிலாளர் சங்கம் மூலமாகவும் வேண்டுகோள்கள் விடுத்திருந்தும் தொழிலாளர் கோரிக்கைக்கு நிர்வாகத்தினர் செவி சாய்க்கவில்லை.

மத்தியஸ்த அதிகாரியையும் ஆலை நிர்வாகத்தின் பிரதிநிதியையும் தொழிலாளர்கள் சந்தித்தபோது அவர்களுக்குத் தரப்பட்ட உறுதிமொழியும் நிறைவேற்றப்படவில்லை.

ஆலை நிர்வாகத்தினர், தொழிலாளர்மீது பழிக்குப் பழிவாங்கும் நோககுடன் அவர்களை வேலையிலிருந்தே நீக்கிவிடவேண்டும் என்ற வகையில், தொழிலாளர் கோரிக்கைகளை இன்றுவரை புறக்கணித்து வந்திருக்கின்றனர்.

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பளிக்க நாட்டில் தொழில் சட்டம், விதிகள் எல்லாம் இருந்தும்கூட, மேற்படி தொழிலாளர் குறைகளை நியாயமான முறையில் களைய இதுவரைஎந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்த ஒரே ஒருவழி, சட்டத்திற்குட்பட்டு வீட்டு அங்கு ஆர்ப்பாட்டம், மறியலில் ஈடுபடுவதுதான் என்று தொழிலாளர்கள் கருதுகின்றனர். (ந. கி.)

'வடவர் 'சமய'த்தினுல்தான் தமிழ் நாட்டில் 'சாதி' எழுந்தது'

டாக்டர் இராசமாணிக்கனார் ஆய்வுரை

விருதுநகர், அக். 25—

"முற்காலத்தில் தமிழ் நாட்டில் சாதி வேறுபாடு இல்லை; இடைக்காலத்தில் வந்த சமயத்தின் மூலம்—வடக்கே இருந்துவந்த மனுதர்ம நூலின் மூலம்தான் தமிழ் நாட்டில் சாதி எழுந்தது; அதற்கு முன்னர், ஒவ்வொருவரும் செய்கின்ற தொழிலைப் பொறுத்து இருந்துவந்த பெயர், பின்னர் சாதிப் பெயராக மாறிவிட்டிருக்கிறது,"

என்று, விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றச் சிறப்புக் கூட்டம் ஒன்றில் 'இன்றைய தமிழர் நிலை' என்ற தலைப்பில் பேசிய டாக்டர் இராசமாணிக்கனார் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், 'மொழி காக்கப்பட்டால்தான் ஒரு நாடும் காக்கப்பட முடியும். தமிழ் மொழி வளர திருமணங்களிலும் ஆலயங்களிலும் மொழி வளர்ச்சி தேவை,' என்றார்.

கூட்டத்திற்கு திரு. ச வெள்ளைச்சாமி தலைமை தாங்கினார் திரு. சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், அவரது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ந. கி.)

'தினக் கூலி' முறைக்கு தொழிலாளர் எதிர்ப்பு

'மாத ஊதியம்' பெற முயற்சிகள் மேற்கொள்ளுவதெனத் தீர்மானம்

திருச்சி, அக். 25—

சென்னை மாநிலத்திலுள்ள எல்லா மோட்டார் போக்குவரத்து சர்வீசுகளிலுமுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும், இன்றைய நாட்களில் ஒத்துவராத 'தினக் கூலி' முறையை நீக்கிவிட்டு அதற்குப் பதில் மாதாந்திர ஊதிய முறையை அமுல் நடத்தச் செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவது என்று; இங்கு கடந்த 21-ந் தேதியன்று நடைபெற்ற சென்னை மாநில மோட்டார் போக்குவரத்து—பொது வேலைத் தொழிலாளர் கழகத்தின் கூட்டம் ஒன்றின்போது தீர்மானம் ஒன்றின் மூலம் கோரப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். பக்கிரிசாமி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் மற்றும் பல தீர்மானங்களும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. (ந. கி.)

முகவரி மாற்றம்

இரே. இளம்வழுதி
வழக்கறிஞர்,
கான்வெண்ட் தெரு,
புதுப்பாளையம்—கடலூர்.

உங்களுக்குத் தெரியுமா?

இப்போது மொத்தம் 101 இந்திய எஞ்சினியர்களும் தொழில் நுட்ப நிபுணர்களும் மேற்கு ஜெர்மனியில் பயிற்சிபெற்று வருகின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களில் இந்தியாவில் உபயோகிக்கப்பட்ட சந்தனத் தைலத்தின் வருடாந்திர சராசரி அளவு 68,000 பவுண்டு என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மேற்கு இரயில்வேயிலுள்ள கிசான் (தெஹ்ரி) பாலம்தான் இந்தியாவிலுள்ள 'பிராட் கேஜ்' இரயில் பாலங்களிலேயே மிக அதிக நீளமானதாகும்; அதன் நீளம் 10,052 அடியாகும்.

கோழிப் பண்ணை அபிவிருத்திக்காக முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் 33 அபிவிருத்தி நிலையங்களும், விஸ்தரிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டன.

குறைந்த வருமானத் தொகுதியினருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், யூனியன் சர்க்கார், 1954 நவம்பரில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் பல்வேறு மாநிலங்களுக்கும் கடன் தொகைகளாக மொத்தம் சுமார் ரூ. 12,74,00,000 கொடுத்துள்ளனர்.

வள்ளுவர் மன்றம் துவக்க விழா

26—10—56-ல், சென்னை ஓட்டேரி வாழைமா நகரில், மேற்படி மன்றத் துவக்க விழா நடைபெற்றது.

தோழர் ஏ. கே. சாமி தலைமை தாங்கினார்; தோழர் என். சேரத்தினம் தி. மு. க. கொடியை ஏற்றிவைத்தார்; தோழியர் சத்தியவாணிமுத்து வள்ளுவர் மன்றத்தைத் திறந்துவைத்தார். ஏ. ஜி. சம்பத்குமார் நன்றி நவின்றார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 தரப்பட்டது— வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

மறைவு

சென்னை 'முரசொலி' பதிப்பக உரிமையாளரும், இயக்கத் தோழருமான தோழர் என். கிருஷ்ணன் அவர்களது தாயார் 24—10—56 அன்று திருச்சி மாவட்டம் ராயவரத்தில் இயற்கை எய்திய செய்தியை அறிவிக்க வருந்துகிறோம். அன்னையை இழந்துவாடும் தோழருக்கு நமது அனுதாபத்தை உரித்தாக்குகிறோம். (ஆ-ர்)

பொதுத் தேர்தலில் போட்டியிடுவர்

நாத்திகர்கள் முன்னணி?

ஐதராபாத், அக் 25—

நாடுமுழுமையிலும் உள்ள நாத்திகர்கள் வருகிற ஜனவரி மாதத்தில், கடப்பை மாவட்ட புரொதத்தூரில்கூடி, வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட ஒரு முன்னணியை அமைப்பார்கள் என்று தெரிகிறது.

சமீபத்தில் நடைபெற்ற நாத்திகர்கள் மாநாட்டில் இந்த முடிவு செய்யப்பட்டது.

வெறும் கனவுதான்!

வாக்குரிமை மூலம் மக்களுக்கு அதிகாரம் இருக்கிறதா?

பூரி, அக். 24—

"தற்கால ஜனநாயகத்தில், மக்கள், உழவு மாட்டிற்குச் சமம்" என்று விநோபா பாவே கூறியுள்ளார்.

"எப்படி விவசாயத்திற்கு மாடுகள் பற்றிக் கவனிக்கப்படுவதில்லையோ, அதைப் போன்றுதான் தலைவர்களும், மக்களைக் கலந்தாலோசிக்காமல் தங்கள் முடிவுகளைத் திணிக்கின்றனர். வாக்குரிமை மூலம் மக்களுக்கு அதிகாரம் இருப்பதாக நினைப்பது வெறும் கனவுதான்" என்றும் விநோபா குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் முழு ஒத்துழைப்பும் பெற்றதே சமூக நலத் திட்டமாகும்

இந்தியத் திட்டங்களின் குறைபாடு குறித்து விளக்கம்

"பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்புடன் கூடிய சர்க்காரின் திட்டம்தான் சமுதாய நலத் திட்டமாகும் என்று நான் கருதுகிறேன். இந்நாட்டிலுள்ள 27,50,000 கிராம மக்கள் இன்னும் நாட்டிலுள்ள மிகப்பெரிய முன்னேற்றமடையாத வர்க்கத்தினர் என்பதை சர்க்கார் உணர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் பெரிய வர்க்கத்தினர்பற்றிய பிரச்சினைகளையெல்லாம் கவனிக்காவிட்டால் பெரிய அளவில் நலத் திட்டங்கள் கொண்டுவரவேண்டும் என்ற சர்க்காரின் நினைப்பு வெற்றி பெறும் என்பதற்கு இடமேயில்லை.

"இந்தத் திட்டங்களையெல்லாம் உருவாக்குவதற்குப் பிரதமர் நேரு, திட்டக் குழுவினர் போன்ற பெருந்தலைவர்களிலிருந்து சாதாரண ஸ்தல நலத்திட்ட அதிகாரிகள் ஆகியோரின் ஆதரவு பக்கபலமாகத்தான் இருந்திருக்கிறது; ஆனாலும் இத்திட்டத்திலுள்ள முக்கியமான குறைபாடு—பலவீனம் என்னவென்றால் இத்தலைவர்கள் எனப்படுவோரில் பெரும்பான்மையினருக்கு, இத்திட்டங்கள் குறித்த தத்துவ ரீதியான அறிவோ, ஸ்தல நலத் திட்டங்களில் நடைமுறை அனுபவமோ எதுவும் இல்லாதது தான்."

"இந்திய நலத் திட்ட வேலைகளுக்குத் தேவைப்படுகின்ற ஆட்களுக்கு உடனடியாகப் பயிற்சி தரப்பட வேண்டும்; குறிப்பாக, 40,000 கிராம மக்கள் அப்பயிற்சியில் இடம்பெற வேண்டும்."

—இவ்வாறு, இந்திய சமுதாய நலத் திட்டங்கள் குறித்துத் தாம் வெளியிட்டுள்ள சிபாரிசு ஒன்றில், மேல்நாட்டு 'போர்டு' நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் கார்ல் சி. டேய்லர் என்பார் தெரிவித்திருக்கிறார்.

கடந்த இரண்டாண்டுக்காலமாக இத்திட்ட நடைமுறையை நேரில் மிக உன்னிப்பாகக் கண்டறிந்த பின்னர் அவர் வெளியிட்டுள்ள இந்தச் சிபாரிசில், திட்ட வேலைகள் அனைத்தும் 'மந்த'மாகவும், 'மெதுவாக'வும் நடைபெறுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். 'என்றாலும், திட்ட வெற்றி கிட்டுவது நிச்சயம்தான்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

தான் வெளியிட்டுள்ள அறிக்கை இப்போதிருக்கிற 'சூழ்நிலைகளை' ஒட்டியே தன்னுடைய 'கண்டுபிடிப்புகள்' தரப்பட்டிருக்கின்றன என்றும், இந்த நிலைகள் மாறுமானால், ஒருவேளை 'நல்ல' விளைவுகள் ஏற்படக்கூடும் என்று தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தச் சிபாரிசு மொழி வெறியல்ல?

இந்திப் பகுதியில் வேறு மொழி பேசும் மாவட்டம் திணிக்கப்படும் விசித்திரம்

மக்களின் கோரிக்கை உதறித் தள்ளப்படுகிறது?

புதுடில்லி, அக். 27—

மூவர் கொண்ட பஞ்சாப் தொகுதி நிர்ணயக் குழு, தன்னுடைய சிபாரிசின் அறிக்கையை உள்நாட்டு அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது.

பஞ்சாப் மொழி பேசும் மக்கள் வாழும் பகுதி இந்தி மொழி பேசும் மக்கள் வாழும் பகுதியிலிருந்து பிரிக்கப்படுகிறது.

இந்தப் பிரிவினை சம்பந்தமாக அங்குள்ள மகாபஞ்சாப் இயக்கம் கங்ரா மாவட்டம் இந்தி பகுதியில் சேர்க்கப்படக் கூடாது என்றும், பஞ்சாப் மொழி பகுதியிலேயே சேர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தது; ஆனால் தொகுதி நிர்ணயக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில், 'கங்ரா மாவட்டம் இந்தி மொழி பகுதியிலேயே சேர்க்கப்பட வேண்டும்' என்று சிபாரிசு செய்துள்ளது.

இந்த மூவர் கமிட்டியில், பஞ்சாப் முதலமைச்சர் ஒருவராவார்.

இந்த கங்ரா மாவட்டத்தில் மக்கள் பேசும் மொழி இந்தியல்ல; 'பஹாரி' என்னும் மொழியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தியாகிகளுக்கு நிலம்

மைசூர் அரசாங்கம் தருமாம்

ஒவ்வொரு காங்கிரஸ் தியாகிக்கும் 10 ஏகர் புஞ்சை நிலம், அல்லது 4 ஏகர் நஞ்சை தோட்ட நிலம் கொடுப்பதற்கு மைசூர் அரசாங்கம் அனுமதித்துள்ளதாம். இதுபோல 468 தியாகிகளுக்கு நிலம் தரப்படுமாம்.

பழைமைக்குப் பலி!

அகமத் நகர், 25—

ஷாமபாய் என்னும் 60 வயது நிரம்பிய மாது இரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது, பண்டைய நாட்களிலிருந்து குருட்டுத்தனமாக ஒரு சிலர் பின்பற்றி வரும் முறையில் தானும், கோதாவரி ஆற்றின்மீது இரயில் செல்லும்போது, நதியில் காசுகளை வீசி எறியமுயன்றபோது கால் தவறி விழுந்து, இரயிலுக்குப் பலியானார்.

பதவியிலிருந்து விலக பண்டிதர் தீவிரம்?

நான்கு ஆண்டு எண்ணம் பற்றி அவர் தரும் விளக்கம்

கான்பூர், அக். 28—

தான் வகித்துவரும் பிரதமர் பதவியை இராஜிநாமா செய்துவிட யோசித்துவருவதாகப் பண்டித நேரு உ. பி. காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனை, அவருக்குக் கடந்த நான்கு ஆண்டுகளாகவே இருந்து வருகிறதாம்!

பிரதம மந்திரி பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நாட்டிற்கு நன்றாக சேவை செய்ய முடியும் என்று அவர் கருதுகிறாராம்!

மேலும், பண்டித நேருவைத் தவிர வேறு யாரும் இந்த வேலையை செய்யமுடியாது என்று கருதுவது அவருக்குப் பிடிக்கவில்லையாம்!

தென்னகத்தின் தனித்தன்மையை அழிக்கச் சதி!

கர்நாடக இசையை கலப்படமாக்க வானொலியின் முயற்சி

அழிவு வேலை செய்யும் நிர்வாகத்திற்குக் குடியரசுத் தலைவர் பாராட்டு

தென்னாட்டின் தனித்தன்மையை அழித்துவிட டெல்லி ஆதிக்கபுரியினர் மேற்கொண்டுள்ள சதி, இப்போது இசைத் துறையிலும் புகுந்து அழிவு வேலையைத் தொடங்கியிருக்கிறது.

வடநாட்டையும் தென்னாட்டையும் வெவ்வேறான நாடுகள்—வெவ்வேறான கலாச்சாரங்கள் கொண்டவை என்று எடுத்துக் காட்டுகிற அடையாளங்கள் பலவற்றுள், வடநாட்டுச் சங்கீதத்திற்கு முற்றிலும் மாறுபட்ட தென்னாட்டு இசையும் ஒன்றாகும்.

அந்தத் தென்னாட்டின் 'கர்நாடக' இசையைக் கலப்படமாக்கத் திட்டமிட்டு வேலை செய்கிறது, டெல்லி!

அகில இந்திய வானொலி நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ள இந்தக் கலப்படம் செய்யும் வேலையை குடியரசுத் தலைவர் இராசேந்திரர் அம்பலப்படுத்தியிருக்கிறார். அவர், அகில இந்திய வானொலி நிர்வாகத்தினர் தென்னாட்டில் 'இந்துஸ்தானி' சங்கீதத்தையும், வடநாட்டில் கர்நாடக இசையையும் பரப்பி வருவதைப் பாராட்டிவிட்டுக் குறிப்பிட்டாராம்.

"இப்படி, ஒரு பகுதி இசை மறு பகுதியில் பரப்பப்படுவதின் மூலம், நாளடைவில் இரண்டும் கலந்த ஒரு கலப்பு இசை உருவாகிவிடும். அது இசைத் துறையில் (வடநாடு, தென்னாடு என்று பிரித்துப் பேச முடியாதவாறு) இந்தியா முழுமைக்குமான ஒரே இசையாகிவிடும்"

என்று டாக்டர் இராசேந்திரர் குறிப்பிட்டாராம்.

விஞ்ஞானக் கருவிகள்

உற்பத்தியை விரிவாக்கத் திட்டம்

மூன்றுவடநாட்டுதொழிற்சாலைகள் முனைந்துசெயலாற்றுகின்றனவாம்

புதுடில்லி, அக் 29—

இந்தியாவிற்குத் தேவையான விஞ்ஞானக் கருவிகள் அனைத்தையும் இந்தியாவிலேயே தயாரிப்பதற்குத் தீவிர முயற்சி எடுக்கப்படும் என்று இந்திய அரசாங்க அமைச்சர் கனுங்கோ தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு இயக்குமதி செய்யப்படும், 'சர்வே' முதலிய கணிதக் கருவிகளின் புள்ளிவிவரங்கள் சரியாகக் கிடைக்கவில்லையாம்!

புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தியின் வேகம் அதிகரிக்கப்படும் என்றும், கல்கத்தா, டேராடூன், ரூர்கி ஆகிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகள் தற்போது நாட்டிற்குத் தேவையான எல்லாக் கருவிகளையும் நல்ல முறையில் தயாரிக்க முனைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்!

திருடன் வருவதை எச்சரிக்கும் அபாயச் சாதனம்

பண்டித நேரு பார்வையிட்டார்

அலகாபாத், அக். 28—

திருடர்கள் வருவதைக் காட்டும் 'அபாய எச்சரிக்கை சாதனம்' ஒன்றை இந்திய விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார். இது மின்சாரத்தால் இயங்குகிறது. இந்தக் கருவியுள்ள வீட்டில் திருடன் கால் எடுத்துவைத்தவுடன் உடனே இந்தக் கருவி 'அபாய அச்சரிக்கை' செய்கிறது; இதை பண்டித நேரு பார்வையிட்டாராம்.

துளசியிலிருந்து கற்பூரம்

புதுடில்லி, அக் 28—

இந்திய விவசாய ஆராய்ச்சிக் கமிட்டியின் கூட்டம் ஸ்ரீநகரில் நடைபெற்றது. கர்னல் சோப்ரா தலைமை வகித்தார்.

மலபாரிலுள்ள வயநாட்டு தாலுகாவில் துளசி செடியிலிருந்து கற்பூரம் உற்பத்தி செய்யப்படுவதுபோல மற்ற சில மரங்களிலிருந்தும், செடிகளிலிருந்தும் கற்பூரம் உற்பத்தி செய்ய இந்தக் கமிட்டி ஒரு தனி திட்டத்தைத் தயாரித்துள்ளது.

மருத்துவத் துறையில் முன்னேற்றம்

விலா எலும்பைக்கொண்டு மண்டை ஓடுக்கு ஓட்டு!

அமெரிக்காவிலுள்ள பிளாரிடா நகரில் நடைபெற்றக் கூட்டமொன்றில், பிளாஸ்டிக் இரண வைத்தியம், புனர் அமைப்பு இரண வைத்தியம் பற்றியும் நோயாளியின் விலா எலும்பைக்கொண்டு எவ்வாறு அவனது பழுதான மண்டையோட்டைச் செம்மையாய் அமைக்கலாம் என்பது பற்றியும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

நோயாளிகளின் மண்டையோடுகளில் பாதிப்பகுதி அளவுக்கு இருந்த காயங்களை அடைப்பதற்கு 60 விலா எலும்புகளை எடுத்து மண்டையோடுகளில் வைத்து ஒட்டுப்போட்டு இணைத்ததாக இரண வைத்தியப் பிரதிநிதிகள் சொன்னார்கள்.

உபயோகிக்கப்படும் விலா எலும்பைக் கவனமாய் எடுத்திருந்தால், 34 நாளில் புதிய விலா எலும்பு வளர்ந்துவிடும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

மண்டையோட்டுக் காயங்களை மூடுவதற்குச் சாதாரணமாக உலோகத் தகடுகளை உபயோகிக்கிறார்கள்; ஆனால் குழந்தைகள் விஷயத்தில் மண்டையோடு வளர்ச்சி அடைந்தவுடன், தகடுகளை எடுத்துவிடவேண்டும்.

கழகக் கூட்டங்கள்

★

திமிரி (வ. ஆ. மா.)

தேரடி மைதானத்தில்

30—10—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

அண்ணா

சி. வி. எம். அண்ணாமலை

போளூர்-சுப்பிரமணியம்

கருத்தோவியன்

குறிப்பு :—அன்று மழை பெய்தால், பொதுக்கூட்டம் திமிரி சினிமாக் கொட்டகையில் நடைபெறும்.

★

சென்னை — ஆசீர்வாதபுரம்

(பிரபாத் டாக்கீஸ் அருகில்)

30—10—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : வி. சீ. தமிழ்தாசன்

பேசுவோர் :

கி. மனோகரன்

சத்தியவாணிமுத்து

முகவை ஆர். எஸ். பாண்டியன்

வ. உ. சி. மன்றத் திறப்பு விழா

31—10—56 மாலை 6 மணிக்கு செய்யூர் சதுரங்கபட்டணம் கோட்டை அருகில், திரு. திருவேங்கடம் அவர்கள் தலைமையில் வ. உ. சி. மன்றத் திறப்பு விழா நடைபெறும்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் மன்றத்தைத் திறந்துவைப்பார்; தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, புரட்சிதாசன், வெற்றிவேந்தன் ஆகியோர் பேசுவர்; தோழர் சி. டி. ஏகாம்பரம் இசை விருந்தளிப்பார்.

மதுரை தியாகராயர் கல்லூரி

இளங்கோ மன்றம்

30—10—56 மாலை 5 மணிக்கு மேற்படி மன்றச் சார்பில், கல்லூரி பேரவை மன்றத்தில், தோழர் ஏ. எஸ். மணி அவர்கள் தலைமையில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், 'ஜூலியஸ் சீசர்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

சென்னை—எஸ்பிளனேடு

ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம்

30—10—56 மாலை 6-மணிக்கு திரு எஸ் அரங்கநாதன் அவர்கள் 'என் ரஷிய அனுபவங்கள்' என்பதுபற்றிப் பேசுவார்; திரு. மா. பெள்ளன் தலைமை வகிப்பார்.

நிலக் கடலையிலிருந்து செயற்கைத் தயிர்!

சென்னை, அக். 28—

மைசூர் உணவு ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் சென்னை நகர மேயரை சந்தித்தனர்.

அப்போது நிலக்கடலையின் பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட செயற்கைத் தயிரைக் காட்டினார்கள். இந்தத் தயிரிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களை எல்லோருக்கும் வழங்கினர். இந்தத் தயிரில் அதிகச் சத்து உள்ளது; விலையும் குறைவானது.

ஆலைஊழியர்களுக்கு

2½ கோடி ரூபாய் போனஸ்

2½ லட்சம் பேர் பெற்றனர்

பம்பாயிலுள்ள 2½ இலட்சம் ஆலை ஊழியர்களுக்கு ரூ 2½ கோடி போனசாக அளிக்கப்பட்டுள்ளது.

ஓராண்டுக்கு 15 நாள் கூலியிலிருந்து 3 மாதச் சம்பளம் வரையில் போனசாக அவர்களுக்குத் தரப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.